Such is the range and magnitude of vision of this gifted son of modern India. He sang in Tamil, the language of a part of Southern India. But he knew, he was a Brahman, one that knows; the most ancient of world's literatures, the Vedas and the Upanishads, knew the entire range of Sanskrit and Tamil literatures, knew the great writers of England and the latest political, social and scientfic developments the world over. And what is precious, knew to distil wisdom out of all this knowledge and apply it to the solution of human ills. With all this he knew to range the entire gamut of human emotions in verse of the highest order and in flights of imagination touch the highest peaks of wisdom and even reach out beyond, towards the stars! All that genius and wisdom and beauty of utterance were won and lost within less than forty years of existence, amidst misery, poverty, political persecution and ill-health as has been the lot of no other poet in life. For Bharathi died in his 36th year in September 1921. But his message and song are for all time. In our trials ahead, and there are many, he shall be our solace and strength, our inspiration and our banner; not only ours but of all those nations which are striving through pain to attain their rightful place in the eyes of God—and Man.

ஸ்ரீ

கம்பர் உவமை நயம்

BY

Pandit T. Ramanujam Iyengar.

காவிய உலகில் இன்றுகாறும் நின்று நிலவும் பெரும் புகழ் படைத்துச்சென்ற புலவர் பெருமக்களுள் தலை சிறந்தவர், நம் கவிச்சக்கரவர்த்தி—கம்பநாட்டாழ்வார் என்பது ஒருதலை. கவிநயங்கள் அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்ற உத்தமக்கவிஞர் இவர். தான் பிறந்ததொரு தகவினால் 'உயர் கம்பன் பிறந்த தமிழ் நாடு' என மேலவர் புகழும் வண்ணம் பெயரிட்டுச் சென்ற பெருமகன். காத்தற் கடவுளாம், திருமாலின் அவதாரமாகிய இராமபிரானிடத்துக் கொண்ட அளவிறந்த பக்திப் பெருக்கால், தான் கண்ட இன்பம் தராதலமும் பெற எண்ணி, அவ்விராம காதையைத் தமிழில் முறைப் படுத்துரைத்த தண்ணளியாளர்.

இப் புலவர் பெருந்தகையை அறியாதார் தமிழ் நாட்டில் இன்னும் இரார். 'கம்பர் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்'—'கல்வியில் பெரியவர் கம்பர்,' என்றின்னோரன்ன முதுமொழிகளே அடுக்கிய மூவுலகும் கேட்கும் ஆற்றல் உடைத்து. ஆயின் இவரது சரிதத்தை உள்ளது உள்ளபடி உணரமாட்டாத நிலையில் தமிழ் நாட்டினராகிய நாம் இன்று இருக்கிறோம் என்று நினைக்கின் நம் மனம் பெரிதும் புண் படுகின்றது. எனினும் இவர் இயற்றிய இராம கதையாவது நம்மிடை நின்று உலவுவது நாம் முன்னைச் செய்த நல்வினைப் பயனேயாம்.

இவ் விராம காதையை முன்னர்த் தேவபாடையில் செய்தவர், 'வாங்கரும் பாதம் நான்கும் வகுத்த வான்மீகி என்பார். கற்பார் இராம பிரானையல்லால் மற்றும் கற்பரோ,' என்று பெரியார் பணித்தருளியபடியே, தன் குணம் செயல் அழகு முதலிய இவற்றால் கண்டவர் தம் மனம் வாங்கும் தன்மை யுடையராய இராமபிரானது கதையினைக் கேட்கும் பான்மை ஒன்றுமே அறம் முதல் பொருள்கள் அனைத்தையும் பயக்க வல்லது என்பது பல்லான்ற கேள்விப் பயனுணர்ந்த பழம் பெரும் மக்கள் துணிவு.

இவ்வாறு ஒப்புயர் வற்றதொரு திவ்விய கதையைச் செந் தமிழ்ப் பாவினல் பரிந்து உரைத்த கம்ப நாடரது இராம காதையோ, அவ் வாரணக் கவிதையாம் வான் மீகத்தினும், பல்லாற்ருனும் பெருமை படைத்தது எனப் பாவலர் பலரும் போற்றுமாறு உள் ளது. நம் கவிச்சக்கரவர்த்தி அதனையே முதல் நூலாகக்கொண்டு வழிநூல் இயற்றினரேனும், கால தேசங்கட் கேற்பச் சிற்சில இடங் களை மாற்றியும், திருத்தியும் புதுக்கிச் செய்யத் தலைப்பட்டனர். மற்றும், இதன்கண் உள்ள சொற் பொருள் நயங்கள், கவியமைப்பு, கற்பனைத்திறன், காவிய அமைதி, தொடை நயம், சந்த இன்பம், இலக்கண விசேஷம், சொல்லணி, பொருளணி ஆகிய இன்னோ ரன்ன சிறப்பியல்புகள் எல்லாம் புலம் மிக்கவரால் பெரிதும் பாராட் டற்கு உரியது. இது கருதியே "கம்பநாடன் கவிதையில் போல் கற்ருேர்க்கு இதயம் களியாதே" என அபியுக்தர் வாக்கு வழங்கி வருவதூம் என்க. பலவாய்ப் பரந்து விரிந்து கிடந்த இலக்கியங் களை எல்லாம் கற்று அவ்வவற்றின் கண் ஒவ்வோர் சுவைநலம் கண்ட கலைவாணர் யாவரும் எல்லா நயங்களும், ஒருங்கு அமையப் பெற்றிருத்தலின் இஃதொன்றனிடத்தே மிக்கதொரு அன்பு செலுத்திப் பயின்று இன்பம் எய்திவந்தனர் என்பது இதன் கண் பொதிந்த புதை பொருளாகும். அவற்றை எல்லாம் எடுத்து விரித்து உரைப்பது ஈண்டைக்கு ஏலாமையின், கம்பர் கையாண்ட உவமைகளின் நயத்தை மட்டும் சிறிது விரித்துக்கூற விடை பெறுகின்றேன்.

உவமை என்பது அணிவகைகளுள் ஒன்று. அணியாவது அழகு செய்வது என்னும் பொருட்டாய், செய்யுள்கட்கு இன்றி யமையாது வேண்டப்படுவது. "உணர்வினின் வல்லோர் அணி பெறச் செய்வன செய்யுள்" என்பது செய்யுளியல். அணி கலகம் அணிந்த நங்கை ஒருத்தி யாங்ஙனம் கண்டோர் பலராலும் விரும் பப்படுகின்றனளோ, அம்முறையே அணியொடுபுணர்ந்த கவிதை யும் கண்டோர் பலராலும் விரும்பப்படும்.

நிற்க, உவமை யணியாவது இருவேறு பொருள்களிடத்து உள்ளது ஒரு ஒப்புமையை விளங்கக் கூறுவது. புலியறியாதான் ஒருவனுக்குப் பூனை ஒன்றனைச் சுட்டிக்காட்டி, 'இது போல்வது புலி, எனத் தெரிவிப்பது இவ்வணியின்பாற் படும். கண்டும் கேட்டும்

இராமையான் புலங்கட்குப் போதம் ஆகாததொரு பொருளை, கண்டது போல மனதில் பதியவைத்து விளங்கச்செய்தல் இதுகொண்டு நாம் அடையும் பெரும் பயனாகும். பிறிதொன்றற்கும் இலதாய்த் தனிவகையான் இதற்கு மட்டும் உள்ள இத்தன்மைத்தாய அரிய பயன் கருதியே, அணிவகைகளைப் பெரிதும் வேண்டாத ஒருசார் பண்டைத் தமிழாசிரியர்களும் இஃதொன்றினையே முனைந்து வேண்டினர். கட்புலன் ஆகாக் கடவுள் பற்றிய உணர்வு உரு முதலியவற்றையும் அவ்வணி நலத்தால் நாம் நன்கு உணர்தல் கூடும். உதாரணமாகக் கடவுளியல் அறியாதான் ஒருவனுக்கு அஃதறிந்தான் பிறிதொருவன், 'கடவுள் விளக்கினை ஒத்து விளங்குபவர், என உவமை முகத்தால் கூறின், அவ்வறியாதான் உடனே, கடவுளைப் பற்றி 'விளக்கினைப் போன்று ஒளியுள்ளவர், அறியாமையாகிய இருள் பற்ற ஒண்ணாதவர்; உயிர்களது அகவிருளைப் போக்கடிக்கும் ஆற்றல் உற்றவர். பிறவிப் பிணியான் வருந்தும் யாவரானும் விரும்பப் படுகின்றவர், என்றிப்படி எல்லாம் அறிபொருளைப் போலப் போதமுண்டாகி விரித்துணர நேரிடுகின்றது. எனினும் இதன் மூலம் இவ்வாறு அறிந்து கொள்ளுதற்கு முன் கடவுளைப் பற்றிக் கொண்டுள்ள உயர்தர எண்ணமும் சிறிது குலைய இடம் ஏற்படும். 'கற்பனை கடந்து நின்று மனம் மொழிகட்கு எட்டாதவர் கடவுள்' என, இவ்வாறு அறிதற்கு முன்னமே கொண்டதொரு பழம் கொள்கை சிறிது அசைவுற்று, 'உலகில் தோன்றும் விளக்கினை ஒத்த எளிய காட்சியையும் உடையர் கடவுள், எனக் கொள்ளும் கொள்கைக்கும் உடன் இடன் தருதல் மன இயற்கையேயாம். ஆகையால் இப்படிப் பட்டதொரு சிறிய குறைபாட்டையும் உண்டாக்காத வண்ணம் உவமை கூறி முடித்தலே உத்தமக் கவிகட்கு இயற்கை. இதனை நம் கவிச்சக்கரவர்த்தியார் பால் தொட்ட தொட்ட இடந்தோறும் மலையிலக்கென இலங்கக் காணலாம். மற்று நடுத்தரம் உடைய கவிகளோ என்னில், இக்குற்றம் உளவாதலை யறிந்து பின் நீக்கும் பொருட்டு " அறையாத மிகு பெரும் காற்று அடித்தாலும் அசையாதே அவியாதே விளங்குகின்ற சோதிமணி விளக்கு" —" கோடாதமணி விளக்கு"—என இவ்வண்ணம் எல்லாம் சில அடை மொழிகளைக் கூட்டி, வேற்றுமை காட்டி உலக விளக்கினும் கடவுளாம் விளக்கு வேறுபட்டு உயர்ந்தது என விளக்கிச் செல்வர். ஆயின் கருவிலே திருவுடைய கவிஞர் இஃதொப்பப் புரிவது இலர்.

உவமை தொடுக்கும் காலத்திலேயே இத்தகைய தாழ்ச்சியுணர்வு பிறக்க ஒண்ணாது மேன் மேலும் உயர்த்திக்கொண்டே போவர். இவ்வுண்மையைக் கம்பர் காட்டிய உவமைகளுள் யாதேனும் ஒன்றிரண்டை ஆயும் முகத்தானே நாம் நன்கு உணருதல் கூடும். இதுவே யான் பிறரிடம் இன்றிக் கவிச்சக்கரவர்த்தியாரிடம் மட்டும் சிறப்புரிமையாகக் கண்டதொரு காட்சி.

கம்பராமாயணத்து இராமலக்குமணரது பாலப்பருவ நிகழ்ச்சிகளைப்பற்றிக் கூறும் பாலகாண்டப் பெரும்பகுதியினுள், 'கையடைப்படலம்' எனத்தலைப்பெயருள்ளதொரு சிறு பாகம் உண்டு. அது அவ்விராமலக்குமணரைத் தயரதன் கோசிக முனிவரிடத்து அடைக்கலமாக ஒப்புவித்ததைப்பற்றிக் கூறும். இப்படல அமைப்பைப்பற்றிக் கப்பர் கையாண்ட முறையைச் சிறிது கூர்ந்து நோக்கின், அவர் அதனை, தயரதன் கொலுவிருக்கை கோசிகர் வருகையும் வேண்டுகோளும், கையடையாக ஒப்புவித்தல் எனமுச் சிறு பகுதிகளாகப்பிரித்துக்கொண்டு கதை நடத்திச் செல்கிறார் என்பது நன்கு விளங்கக்கூடும். அதனுள் தயரதன் கொலுவிருத்தற் சிறப்புப்பற்றி நான்கு கவிகள் சொல்லப்பெற்றிருக்கின்றது. அதுபற்றியதே நமது ஆராய்ச்சி.

தயரதனோ அறுபதினாயிரம் ஆண்டுகள் உலகு முழுவதும் உறுபகை இன்றியே ஓம்பினோன்: சக்கரவர்த்தி, வள்ளல், பொருள் போகம் அதிகாரம் என்றிவற்றான் தன்னோர் ஒப்பார் இம்பர் இல்லை என்னும் வண்ணம் நிமிர் கீர்த்தி உள்ளோன். இத்தகைய பேரரசனது இருக்கையை நமக்கு அறிவிக்க நினைக்கிறார் கவி. உடனே நாம் அறியாத இதனை அறிந்ததோர் உவமை காட்டித் தெளிவுறுத்துவான் வேண்டினார். இவ்வளவு பெருமை உடையானுக்கு உலகத்துள்ள பொருள்களை உவமை கூறின் அது விலங்கினுள் மிக்கது விண்ணவர்தரு என உவமை கூறலின் வேறு அல்ல. ஆகையால் பொருள் போகம் அதிகாரம் முதலியவற்றால் மிக்குடையனாய்க் கருதப்படும் இந்திரனை உவமை கூறி முடிக்கின்றார். இவ்வாறு கூறுங்காலத்து, நாம் முற்கண்டபடி இந்திரனுக்கு உள்ள குற்றம் குறைகளும் உடன் சார்தல் கூடும். அன்றியும் 'இந்திரனை ஒத்தவன் தயரதன்' எனக்கூறின் 'தயரதனும் இந்திரனும் ஒப்பாவர்' எனக் கற்போருக்குக்கருத்து உண்டாகி, இந்திரனினும் சிறந்த

வன் தயரதன் எனக்காவிய முறைக்கு ஏற்ப எடுத்த தலைவனுக்கு ஏற்றம் கூறும் பாவம் குறைபடும். இவ்விதம் சிறிது தாழ்வுணர்ச்சி பிறத்தற்கு இடங்கொடுத்தலே இவ்வுவமையின்கண் உள்ள ஊறுபாடு என முன்னர்க்கண்டோம். ஆனால் நம் கவிச்சக்கரவர்த்தியாரோ இவ்விரு குறையும் ஒருங்கு நீங்குமாறு முதல் மூன்று பாட்டுக்களில் நின்றே 'தயரதன் இந்திரனினும் சிறந்தவன்' என்ற எண்ணம் உடன் உடன் உதிக்குமாறு கவிகளை நன்கு நயம்படப் புணர்த்து இறுதியாகக் கோசிக முனிவனைத் தயரதன் வணங்கி உபசரித்தான் எனக் கூறவேண்டிய இடத்து,

"கந்தமலரில் கடவுள் தன்வரவு காணும்
இந்திரன் எனக் கடிது எழுந்து அடி பணிந்தான்"

எனக்கொண்டு முடிப்பர். இப்படிக் காட்டியுள்ள உவமையுள் நாம் முற்கண்ட தாழ்ச்சியுணர்வு பிறவாமைப்பொருட்டு "தயரதன் வீற்றிருந்த மண்டபம் சுதர்மையினும் மிக்கது; தயரதன் இந்திரனினும் மிக்கவன்; ஆங்கு வந்த கோசிகன் பிரமனினும் உயர்வு பூண்டோன்; என உபமேயமாகிய கோசிக தசரதாது தோற்றமே அதனினும் சிறந்ததெனத் தோற்றுமாறு, இப்படல முதல் செய்யுள் முதற்கொண்டே அடிகோலும் ஆசிரியரது தன்மை ஆய்ந்தாய்ந்து மகிழ்தற்குரியது.

"நனைவரு கற்பக நாட்டு நல்நகர்
அனைவரும் அணைதர அயிர்க்கும்; சிந்தையால்
நினையவும் அரியது; விசும்பின் நீண்டது' ஓர்
புனைமணி மண்டபம் பொலிய எய்தினன்"

என்பது இப்படல முதற்செய்யுள். அரும்புகள் அலரப்பெற்ற கற்பக விருக்ஷத்தைத் தனக்குச்சிறப்புரிமையாகக்கொண்ட அமராவதிப்பட்டணத்தில் வசிக்கும் தேவர் அனைவரும், நம் இந்திரன் வீற்றிருக்கும் சுதர்மை என்பது இதுதானோ என்று ஐயுறும் வண்ணம் அழகு வாய்ந்ததாயும், மனதினாலும் நினைத்தற்கு அரியதாயும்; ஆகாயத்தை அளாவிய உயரமுடையதாயும்; தனது வருகை நோக்கி அலங்கரிக்கப்பட்டதாயும் உள்ளதொரு மண்டபத்தைத் தயரதன் அடைந்தான் என்பதே இதன் தெளிவான பொருள். பின்னர் இந்திரன் எனத்தயரதனை உவமிக்கக் கருத்துக் கொண்ட கம்பர்,

இச்செய்யுளிலேயே தயரதன் மண்டபம் தேவேந்திரன் மண்டபத்தினும் பலவகைச்சிறப்புற்று இலங்குவது என்பதனை "கற்பக நாட்டு நல்நகர் அனைவரும் அணைதர அயிர்க்கும்..........மண்டபம்' என்ற சொற்கிடக்கையால் பெறவைத்தார். அன்றியும் புண்ணிய வினை மிகப்புரிந்து தேவரானமையான் அயிர்த்தற்கு காரணமற்ற அறிவு மிகவுடைய அவர்கள் அனைவருமே, ஒருசோத் தினந் தோறும் பழகிப்பயின்று அறிந்தமண்டபத்தின் இயலையும் மறந்ததோடு இன்றி இதுதான் நம்பண்டபம் எனத்துணியவும் செய்தனர் எனில் தயரதனது மண்டபம் அதனினும் மிக்கதொரு அழகியதென்பதனை வற்புறுத்தியதாகும் அன்றே! இவ்வாறு மண்டபத்தின் அழகைச் சுதர்மையினும் மேம்படுமாறு குறிப்பாற் காட்டிய இவர் கூறியுள்ள அடுத்த கவியையும் ஆராய்வோம்.

> "தூயமெல் அரியணைப் பொலிந்து தோன்றினன்,
> சேயிரு விசும்பிடைத் திரியும் சாரணர்
> நாயகன் இவன்கொல்? என்று அயிர்த்து நாட்டம் ஓர்
> ஆயிரம் இல்லை என்று ஐயம் நீங்கவே"

மிகப் பெரிய வானத்து இயங்கும் தேவதூதர்கள் அனைவரும் நம் நாயகன் இந்திரன் இவன்தான் என்று சந்தேகித்துப் பின்னர் ஆயிரம் கண் பெற்றிலாமையின், அல்லன் எனத்தேறும்படி ஆதனத்து அமர்ந்தான் தயரதன் என்பது இதன் கருத்து. இதன் உள்ளும், முன்கவியில் மண்டபத்தைத் தேவமண்டபமாகிய சுதர்மைக்கு ஒப்பிட்டதற்கு ஏற்ப, தயரதனை இந்திரன் என ஒப்பிடுதலோடு, இந்திரனினும் உயர்ந்தோன் தன் காப்பியத் தலைவனும் தயரதன் எனத் தொனிக்குமாறு அமைத்திருத்தல் கற்போருக்குக் கழிபேரின்பம் விளைப்பது. பிறிதும், பொதுவகையால் தேவர்கள் அயிர்த்தனர் என்னாது சாரணர்களாகிய தேவதூதர்களை எடுத்தமைத்ததன் நயம் நாக்கொண்டு நவிலும் நடுத்தரம் உடையதன்று. தேவ ஒற்றராவார் தம் தாய்நாட்டிற்கும் நாட்டினை ஆளும் அரசற்கும் யாதொரு வகையினும் இடர் உறாதவாறு நன்கு காத்துவரவேண்டி மாற்றாரது புலம் சென்று அடிக்கடி உளவு அறிந்து அப்பொழுதைக் கப்பொழுது அரசனைக் கண்டு வந்து சொல்லும் தன்மையர். ஆகவே இவர்கள் எவ்வாற்றானும் தன் அரசனை மறக்கவோ, அன்றி வேறு எவரையும் தம் அரசர் என்று அயிர்க்கவோ இடம் சிறிதும்

இல்லை. உதாரணமாக, ஆண்டுகள் நாள் திங்களாய்த் தம்முடன் மன்னி உறையும் தன் தகப்பனை உரு அறியாது வேறு ஒருவனைத் தன் தகப்பன் என ஒருவன் மயங்கிக்கண்டனன் என்பது மெய்யாகுமேல், தன் தகப்பனினும் உரு ஒளி நலங்களில் அவ் வேற்றான் மிக்கிருப்பன் என்பது சொல்லாமலே போதரும். இம்மட்டுமோ! 'நாட்டம் ஓர் ஆயிரம் இல்லை என்று ஐயம் நீங்கினர் என்பது அவர்கள் ஐயம் நீங்கித் தெளிதற்கோர் ஏது வாய்பாடாக எடுத்துக்காட்டப்பட்டதாயினும், தொனி வகையானும் குறிப்பு வகையானும் 'இந்திரனுக்கு அகலிகை காரணமாக எய்திய சாபங்கருதி ஆயிரம் கண் ஏற்பட்டது. அது குறையுடைமை. ஆயின் தயரதன் அக்குறையும் இன்றி இந்திரனினும் சிறந்தோன் எனத் தெரிவித்தும் நின்று, தயரதனுக்கு ஏற்றம் எய்துவிக்கின்ற தன்றோ! என்னே கம்பர் கவிப்பெருமை! 'கல்வியில் பெரியவர் கம்பர், என்ற பழமொழியைப் பொய்யாக்கி, கல்வி கம்பரால் பெரியது, என்று நிலை நாட்டும் வண்ணம் உள்ள கவிகளின் பெருமை இப்படி அன்றோ இருத்தல் வேண்டும்.

இனி இதனை அடுத்தகவி கோசிகன் வருகையைக்குறிப்பது.

"மடங்கல் போல் மொய்ம்பினான் முன்னர் மன்னுயிர்
அடங்கலும் உலகும் வேறு அமைத்துத் தேவரோடு
இடம் கொள் நான் முகனையும் படைப்பன் ஈண்டு எனாத்
தொடங்கிய கோசிக முனிவன் தோன்றினான்" இக்கவியுள்

விஸ்வாமித்திர முனிவன் வந்தான் எனக் கூறுகின்றவர் திரிசங்கு விற்காக உலகம் படைக்கப் புகுந்த வரலாறு குறிக்கும் அடைமொழியுட் சில புணர்த்துக் கூறுகின்றனர். இங்ஙனம் கொண்டதும் தான் பிற்கூறப் புகும் உவமையினுள் யான் முற் கூறிய ஊறுபாடு உறாமைப் பொருட்டே என்க. முன் இருகவியால் தயரதன் தேவேந்திரனினும் பொலிவுற்று விளங்கினன் என்பதைத் தெரிவித்து, கம்பநாடர் இங்கு தேவேந்திர சபைக்கு அடிக்கடி வரும் பிரமனை ஒப்ப, அவனினும் சிறந்த விசுவாமித்திரன் வந்து சேர்ந்தான் என்பார், "மன்னுயிர் அடங்கலும் உலகும் வேறு அமைத்துத் தேவரோடு இடங்கொள் நான் முகனையும் படைப்பன் ஈண்டு எனாத் தொடங்கிய கோசிக முனிவன் தோன்றினான்" என்றார். இவ்வாறு

விசேடித்தது பின் அவன் கோப பரவசனுவதைக் குறித்துப் போலும்! சத்யலோகத்தில் உள்ள தேவகணங்களையும், பிரமனையும் ஒரு சேர இவ்வுலகிலே உண்டு பண்ணத் தொடங்கிய முனி எனவே, பிரமனினும் முனி உயர்ந்தவன் என்றதொரு தன்மை துளக்க மற விளக்கமாகும்.

இவ்வாருக, தேவலோகத்திலுள்ள சுதர்மையினும் அழகுடன் விளங்கிற்று தயரதனது மண்டபம், தேவ இந்திரனினும் அழகு மிக்கு விளங்கினன் தயரதன், அங்கு வரும் பிரமனினும் பெருமை படைத்தான் ஈண்டு போந்த கோசிகன், என உவமையைத் திறம் பட எடுத்து நாட்டி இறுதியில்,

"வந்து முனி எய்துதலும் மார்பின் அணி ஆரம்
அந்தர நிலத்து இரவி அஞ்ச ஒளி விஞ்சக்
கந்தமலரில் கடவுள் தன் வரவு காணும்
இந்திரன் எனக்கடிது எழுந்து அடிபணிந்தான்,,

எனக் கூறிப் போகும் நயம் நன்கமைந்ததொன்ரும்.

இப்படிக் கூறிய உவமையில் யான் முற்கூறியபடி யாதொரு குற்றமும் ஏற்பட இடம் இன்றி ஒழிவதோடு, காவிய முறைக்கு ஏற்பத் தான் எடுத்து நாட்டிய தலைவருக்கு ஏற்றம் காட்டிய நிலையும் நன்று வீறி விளங்குதல் கண் கூடு.

பரிமேலழகரந்தாதி.

BY
A. V. Krishnamurthy, I. U. C.

(காப்பு)

பரிமே லழகரந் தாதிக்குக் காப்புக்
கரியா னனத்தான் கழல்
மங்கை மணாளன் மதிதிக ழொண் முகத்தான்
கங்கைச் சடைத்தலையா னெண்குணத்தான்ருளை
பரியூர்ந் தழகன்மே லந்தாதி பாட
பரிந்துத் தலைக்கொள்வல் யான்.

(இன்னிசை வெண்பா)

1. பேசுகவாய் தென்மது ரேசன் பெயரெல்லாம்
கேசவன் தங்கை மணாளனை காண்க வெண்கண்
கேட்க செவி சொக்கன் திருக்கோயில் கோபுரத்தை
நோக்கியே கூப்புக வென்கை.

2. வெண்மதியும் தாரகையும் ஆதவனு மாய்கின்ற
வெண்மதி வொண்முக மங்கை மணாளனை
அண்டமெலாம் ஆள்வானை பூதி அணிந்தானை
அண்டரேற்றை நெஞ்சமே நன் கெண்.

3. நன்னெஞ்சே நல்லேனம் நாடாத நற்றாளன்
நன்கன்னம் நாடாத நீர்முடியன் சொக்கனை
நாடுதியேல் நீங்கிடும் நீள்வினை நிங்கிடயான்
நாடுவன் நாதன் பதம்.

4. படியிற் சிறந்தத் திருவா தவூர
னிடரொழிக்கச் செய்தாய் நரியைப் பரியாய்நீ
பிட்டுக்கு மண்சுமந்து பட்ட பிரம்படி
பட்டது பாரெல்லாம் முன்பு.

5. முன்பு வளையிட்டாய் மங்கையர் கைகளில்
பின்பாண பத்தன் துயரொழிக்க யாழ்வல்ல
பாடகனாய்த் தோன்றித் தெருவில் விறகுவிற்றாய்
கூடற் திருப்பதி வாழ் சொக்கா

6. சொக்கனே யென்றுன்னை நாள்தோறும் போற்றிய
குற்றமிலா நான்மறை யோதும் தருமிக்குப்
பொற்கிழி தந்த கயற்கண்ணி நாயகனே
குற்றமிகும் நாயேனைக் காவாய்.

7. காவாய் எனையென்றும் காமனைக் காய்ந்தகண்ணா
தேவரெலாம் தெள்ளமுதமுண்ண விடமுண்டாய்
மன்னவன் மைந்தனுக்கு மாமுடி சூட்டிட
மூன்புசெம் மாணிக்கம் விற்றாய்.

8. வில்வித்தை வாள்வித்தை போதித்தச் சற்குருவி
னில்லாளைக் காமுற்ற வஞ்சகனும் சித்தனை
அங்கம் சிதைத்திட்ட ஆலவாய்ச் சொக்கனே
மங்கை மணாளனே போற்றி.

9. போர்க்களத்துச் சுந்தரப்பே ரம்பெய்தாய் நீர்தாங்கும்
வார்ச்சடையாய் சித்தனாய் தோன்றிக் கரும்பைக்
கரிக்களித்தாய் கால்மாறி யாடிய சொக்கா
குருகிற்கு முத்தி கொடுத்தாய்.

10. கொடியச் சமணரை சம்பந்தன் போக்கிட
சொக்கா அருள்புரிந்தாய் மற்றுமவரேவிய
மாய பசு வதைத்து மால்யானை மாய்த்திட
வீரனே வெஞ்சரம் விட்டாய்.
தேரின்றி வில்லின்றி அம்பின்றி புன்சிறிப்பால்
ஆரெயில் மூன்றும் அழித்தான் அடியேத்திக்
கூடற் பரியூர்ந் தழகன்மே லந்தாதி
பாடினன் புல்லறிவன் யான்.

குறிப்பு:— இச் செய்யுட்கள் மிகவும் பிழைபாடுடையதாயினும், எழுதியவரின் ஊக்கத்தைத் தாழ்வுபடுக்கக் கூடாதென்று கருதி மட்டும் பிரசுரிக்கலாயிற்று. Ed.

எனது ரெயில் பிரயாணம்

M. Karuppiah, II. U Class.

சென்ற விடுமுறை ஆரம்பித்தவுடன் கல்லூரியாரால் விடப் பட்ட அறிக்கையை நினைத்தேன். என்ன! மனிதனாவது மன் னார் பார்ப்பதாவது, செல்வோம் சென்னைக்கு கண்ணுறுவோம் பொருள் சாலையை, என்று ஒரு எண்ணம் என் மூளையைச் சிதைத் தது. சரி சென்னைக்குச் செல்லச் சரியான வண்டி எக்ஸ்பிரஸ் (Express) என்று 6½ மணிக்கு மூட்டை முடிச்சுகளுடன் மதுரை ஜங்ஷனை யடைந்தேன். சரியான நேரத்தில் வண்டியும் வந்தது. நானும் சரியான இடம் பார்த்து அதில் அமர்ந்தேன்.

இவ்வாறு தானேயா! பிடித்தது. ஆறே முக்கால் அறையும் காலும் (ஏழரை நாட்டான்) ஒரு மகாத்மா இடமில்லாதது போன்று பாதி என் தொடைமேலும் பாதி பலகையின் மேலுமாக அமர்ந்து கொண்டு, இதுதானே செங்கோட்டை வண்டி? என்றார். அந்த மகாத்மா, முனிசிபாலிட்டித் தொட்டி பார்த்திருக்கிறீர்களா? அதே மாதிரிதான் சந்தேகமே இல்லை. கருட கர்வபங்கத்தில் (சினிமா பகுதி) கருடனுக்கு மூக்கு எப்படியோ அதே அச்சுத்தான் இருவருடையதும். ஆஹா! என்ன தேகத்தின் அமைப்பு! ஒரு சிறு யானைக்குட்டி என்றே சொல்லவேண்டும். போதாக்குறைக்கு ஆசாமி ஒரு பொடி அபிமானி, கேட்கவாவேண்டும், இடைஞ் சலுக்கு! மறுபடியும் இதுதானே செங்கோட்டை வண்டி? என்றார். ஏனையா, மனுஷனுக்கு கண்ணில்லையா? என்னையா கேட்கவேண்டும். அதோ கொட்டை எழுத்துக்களில் எழுதியிருக்கிறதே! இதெல் லாம் யாரைச்சொல்லி என்னபயன்! நம் காலம், நல்ல வேலை "தலைக்கு வந்தது தலைப்பாகையுடன் போச்சு" அந்த ஆசாமி இறங் கினதும் ஒரு கருணாநிதி (பிள்ளைகள் விஷயத்தில்) இருமனைவிகளை யும், ஒரு டஜன் குழந்தைகளையும், போதாக்குறைக்கு மைத்துனர் களில் அரை டஜனையும் பரிவாரமாகக் கொண்டு ஏறினார். இந்த ரெயில்வே கம்பெனியார்கள் இருக்கிறார்களே! மோசம்! மகா மோசம்! இந்த மூன்றாம் வகுப்பு என்ன, அவர்கள் காலில் ஒட் டின தூசியா? இருக்கட்டும் ஒரு கை பார்க்கிறேன். நான் சொல் வதை அவர்கள் கேளாவிட்டாலும், சொல்லத்தான் போகிறேன்.

(1) இந்த மூட்டைப் பூச்சிகளை, இனிமேல், மூன்றாவது வகுப்பில் கண்டால் அவைகளுக்கு 144, போடவேண்டும். (2) '2 பேர் என்று போட்டிருக்கும் ஸீட்டில் 6 பேர் உட்கார விடக்கூடாது. (3) ஸீட்டின் டிக்கட் தவறிவிட்டால் அவர் களுக்கு சொற்ப அபதாரத்தில் வேறு டிக்கெட் கொடுக்கவேண் டும். (4) ஒருவர் அனுமதியின்றி மற்றவர் அவரிடம் எதையும் பேசவோ, எதையும் செய்யவோ, கண்டிப்பாய்க்கூடாது.

இது நிற்க, மேற்படி குடும்பி, தன்னுடைய சேனையை, அந்த கம்பார்ட் மெண்ட் முழுவதும் நிரப்பினார். (இப்படி 4 பேர் இருந் தால் ரெயில்வே கம்பெனியாருக்கு.........................) கடைசியாக, தனக்கு உட்கார இடமில்லாமல் போக, என்னிடம் வந்து பக்கத்

தில் நின்று கொண்டார். "இது வரையில் அனுபவித்தது போதும்" இனிமேலாவது கொஞ்சம் சௌகர்யமாக இருக்கும் "என்று எண்ணி, நான் அவர் அருகில் வந்த உடனே, 'எங்கே உதைத்துத் தள்ளிவிடுகிறாரோ' என்று பயந்து கொண்டு, கொஞ்சம் நகர்ந்து உட்கார்ந்தேன். இது தான் சமயம் என்று எண்ணிய கருணாநிதி, பாதி என் தொடைமேலும், பாதி பலகையின் மேலுமாக உட்கார்ந்தார். அவரை அப்படியே விழுங்கி விடலாமென்று நினைத்தேன். ஆனால் அப்படிச் செய்தால் அவர் சேனை முழுவதும் அழக்கிளப்பிவிடும்.—(ஒரு வேளை அழுகை வெள்ளம் என்னை இழுத்துக் கொண்டு சென்று விட்டால்?) என்று பயந்து பேசாமல் இருந்தேன். ரெயில் வண்டி, கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த எனக்கு, இரக்கப்பட்டது போல அடுத்த ஸ்டேஷனை (கொடைக்கானல் ரோடு) வந்தடைந்தது. யாரோ ஒருவன் மலைவாழைப் பழம் விற்றுக்கொண்டிருந்தான். அவனைக் கூப்பிடலாமென்று, சிறமப்பட்டு எழுந்து, பழக்காரனைக் கூப்பிட்டேன். அதற்குள் குடுப்பியும், குடும்பி பரிவாரங்களும் அன்போடு செய்தார்கள். பழம் வாங்கின வேகத்தில், வண்டி புறப்பட்டதால்........................ பழம் தின்னும் ஆசையால் எதையும் கவனிக்கவில்லை. பிறகு திண்டுக்கல்லில் எல்லா சனியனும் தொலைந்தன. சரி! இந்த ஸ்டேஷனில் நமக்குச் சுக்கிரன் ஏறப்போகிறான், சனியன் கிரகத்தை விட்டுப் பெயர்ந்து விட்டான். என்று நினைத்துக்கொண்டு. அமைதியாய் நிர்மானுஷ்யமான, அந்த அறையில் காலை நீட்டிக் கொண்டு, தலைக்கு மூட்டையை ஆதாரமாக வைத்துவிட்டு, 'கும்பகர்ணலஞ்சு ஹேமி'ற்குள் நுழைந்தேன்.

எத்தனை மணி நேரம் தூங்கினேனென்று தெரியவில்லை கடுக்கனை (வைரமாக்குமென்று நினைத்து) யாரோ கழற்றுவதுபோல் தோன்றியது உடனே சுட்ருடி வாரிக்கொண்டு எழுந்திருந்தேன் டிக்கெட் எக்ஸாமின்னர் (Ticket examiner) என் காதில் காப்பிங் பென்சிலை விட்டுப் பூகோள ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தார், "ஓய், எங்காணும்! உமக்கு மூளை இல்லை?" என்று ஒரு போடு போட்டேன். அவர் பக்காப் பேர்வழி. "ஓய், உம்மைப்போல் பதினாயிரம் பேர்; ஒன்றில்லை இரண்டில்லை; பதினாயிரம்! ஞாபகமிருக்கட்டும் ரொம்ப ஒட்டாதேயும். மூச்சு விடாமே டிக்கட்டை எடும்.

ஆளைப்பார். கும்பகர்ணன் மாதிரி!" என்று ஒரு குட்டி லக்சர் கொடுத்தார். நானும் பின் வாங்காமல், "சரிதானய்யா நிறுத்தும், டிக்கட்வேண்டுமென்றால் வாங்கிக்கொள்ளும் அதிகப்பேச்சு வேண்டாம்" என்றேன். டிக்கட் எடுப்பதற்கு கைக்குள் பையை விட்டேன் சே! சே! பைக்குள் கையை விட்டேன்—ஆஹாஹா! மணிபர்ஸை பறிமுதலாகி விட்டது. பழம் வாங்கும் பொழுது சில்லரை எடுக்க எடுத்த மணிபர்ஸை கீழே போட்டுவிட்டேன் போலிருக்கிறது. என்ன செய்வது? டிக்கட் எக்ஸாமினரிடம் இதைச்சென்னால் நம்புவானா? ஒருக்காலும் நம்பான். சிறிது நேரம் தேடுவதுபோல் பாசாங்கு செய்தேன். ஓய் என்னங்காணும், ஹம்பக் வேலையா? டிக்கட் இருக்கா இல்லையா?" என்று அதட்டினார். டிக்கட் எக்ஸாமினர் ஐயா! "பொறுத்தார் பூமியாள்வார் என்பது முதியோர் வாக்கு சற்று இரும் தேடி எடுத்துத்தருகிறேன்" என்று கீழ்ஸ்தாயியில் பல்லைக்காட்டிக் கெஞ்சினேன்.

"டேய், நிறுத்துடா, உன் வியாக்யானத்தை! எனக்கு அப்பவே தெரியுமே. சுத்த ஹம்பக்!" என்று 'டா'வில் ஆரம்பித்து விட்டான் டிக்கட் எக்ஸாமினர். 'இனிமேல், நான் என்ன பண்ண முடியும்? டிக்கட்பர்சில் தான் இருக்கிறது. பர்ஸோ பரிமுதலாகி விட்டது. சில்லரை இருந்தாலாவது அவனைச் சரிப்படுத்தலாம். (இந்த நாளில் பர்ஸின் கதி இப்படித்தான்.) அடுத்த ஸ்டேஷனையும் அலறிக் கொண்டு வந்தடைந்தது ரெயில் வண்டி. அடாடா, நான் வந்திருப்பது திருச்சி ஜங்ஷன். "இறங்குமையா, கீழே" என்றான் டிக்கட் எக்ஸாமினர். இன்னும் இறங்காமல், எங்கே போகப் போகிறேன்," என்று நிலைத்துக் கொண்டு இறங்கினேன். நாவலில் படிப்பது போல நல்ல சமயத்தில் நண்பன் வீரணனைக் கண்டேன். (வீரணன் டிக்கட் புக்கிங் கிளார்க்கு செலெக்ஸனுக்கு வந்து.......................) அவரின் விருத்தாந்தங்களை எல்லாம் கேட்டேன். இதற்குள் டிக்கெட் எக்ஸாமினர், "புறப்படுமய்யா, காலமாகிறது," என்று கதறினான். வீரணனிடம் விருத்தாந்தங்களை எல்லாம் விபரமாய்ச் சொன்னேன். நல்ல வேளையாக அவர் எனக்கு வேண்டியவற்றை எல்லாம் உதவினார். பின் நான்கு மணி நேரம் வண்டிக்காகக் காத்துக் கொண்டிருந்தது, அவரிடம் டிக்கட்டுக்குப் பணம் வாங்கி என் ஊருக்கு (சோளவந்தான்) ஒரு டிக்கட் எடுத்துக்கொண்டு நேராக மதராஸ் செல்லாமல் திரும்பி விட்டேன்.

HIGH SCHOOL
SECTION.

OURSELVES

We are happy to inaugurate the opening of a separate "High School Section" in this magazine, for the exclusive benefit of the pupils of the two High Schools under the Madura College Board. The great hope in instituting this section is that most of the active students of our High Schools will avail themselves of this avenue to contribute their own small and interesting articles, so that this literary organ may afford them pleasure, more real and enduring, than that it has been yielding till now. Famous journalists and statesmen, philosophers & historians, scientists & men of letters, it should be remembered here, have had the successful beginnings of their illustrious careers, in many cases only in their contributions to magazines of this kind. Hence it is earnestly exhorted that that this section is literally crammed with short stories and biographies, humour and wit, dialogues and fables and puzzles and anagrams by our pupils (down to IV Form), in their own words.

May our juvenile scholars be helped to untiring zeal, energy and success in these proud literary attempts of theirs.

Associate Editor.

A MESSAGE

The President and Executive Committee of the Madura College Board have been pleased to appoint me as the head of the Setupathi High School whose destinies in the past had been guided by such illustrious gentlemen as the late Mr. S. S. Venkataramana Iyengar and the late Mr. C. Narayanaswami Iyer. In the full hope that the Almighty will vouchsafe unto me the necessary strength and wisdom, in the full confiidence that all my consructive and enduing schemes will have the full support of the College Board, and, all the same, with no little trepidation, I have accepted to shoulder this very heavy responsibility.

The Setupathi High School, Madura, is one of the biggest High Schools in the Presidency and has built up a noble tradition. It shall be my constant and earnest endeavour to improve the institution in all possible ways, build up, God willing, a nobler tradition and when that day comes for me to lay down the reins of office, leave it better than I found it.

Let me avail myself of this opportunity to appeal to all the members of the staff to work with greater vigour, with greater enthusiasm and with greater earnestness, and to extend their co-operation to me in everything that is calculated to promote the interests of the institution.

To the students of the Setupathi High School I have a special message to send. They will kindly remember that they owe a great duty to their *Alma Mater*, that they have a great share in the building up of a better tradition, and that the honour and prestige of the institution are in their hands. They will contribute their quota and help in making this institution, with regard to results at the Public Examination and General Discipline, the premier institution of this city, if not of this Presidency. They will strive to retrieve the past glory of the institution and help to make it a real Temple of Learning and Culture. The institution expects much from its students, who will enable it to come in a line with the first-rate institution of this Presidency.

I observe, with genuine pleasure, the great interest and enthusiasm evinced by the members of the staff with regard to the morning and evening prayers. 'More things are wrought by prayer than this world dreams of'. Heartfelt prayers will bring us nearer to our Creator and establish an invisible link between us and God. Let me, in conclusion, invoke the blessings of the Giver of All Good and pray that all our activities be crowned with Success.

Head master

S. H. S.

THE HOST AND THE GUEST

BY

K. Ibramsa, VI Form B. S. H. S. (Botary Section)

It is a matter of custom in our daily domestic life to welcome our guests with all respect, and honour and feed them sumptuously with all love and sincerity. The same procedure is being followed by the plants also in their daily life. Now, anyone interested in the study of nature and its surroundings will be, indeed, curious enough to understand and comprehend the methods adopted in the plant kingdom. Of course, it is a matter of interest which demands gradual and careful scrutiny at the hands of the lovers of natural science.

Generally the guests are very clever in the selection of their hosts. They try to findout by hook or crook the nature and the disposition of their hosts. Thus the guest goes to the host only after understanding the latter completely. In the same manner, the guests in the plant kingdom, namely, the insects select the host by their colour and their fragrance; this corresponds to the personality and the charitable disposition in the human hosts. Just as, human guests are ever on the watch for ceremonial and gay functions where in they can do full justice to themselves, so also the insect guests go after only flowers in mosaic clusters.

Thus we find that selfishness alone dominates in human hosts; the latter never likes to part with other belongings of his except the food and even that within limits. But what we notice in the plant world is selflessness incarnate. They, not only give their nectar but the pollen grains also, so that, the guest may not quit the place half-heartedly. From this it is quite evident that the relationship between the guest and the host in the plant kingdom is by far higher and better than that in the human kingdom. The plants show themselves markedly that, even though they are placed in a class lower than that of the human beings, they can excel the latter, who are supposed to be their god-fathers, in love, sympathy, generosity and selflessness. This is fit to be a lesson for mankind as a whole. Such a combination of characters in the plant kingdom is wonderful and it is worth imbibing.

DRINK AND ITS EVILS

BY

R. Narayanan, V Form B, S. H. S.

"First the man takes a drink, then the drink takes a drink then the drink takes the man", is a proverb which is absolutely true. It is one of the gravest social evils which persists in India still and all possible efforts should be made to combat it. It affects first and foremost the brain of the man· He loses his memory in a short period. Many families in India have been ruined on account of this bad habit. Many others have lost their employment on account of this evil habit. History reveals several instances of kings losing their kingdoms on account of this evil habit. In our own land, the Yadhavas to which community belonged Lord Krishna Himself are said to have lost all their virility, courage and steadfastness on account of their taking to drink. Once, we are told, that the Yadhavas began to discuss about the Mahabarata war on the banks of the river Propasa, but as they were drunk to maximum capacity, the discussion resulted in a confusion and broil. They fought among themselves and many perished. Again, we have the instance of the great Assyrian King, Belshazaar, losing his very kingdom on account of himself and his courtiers taking to drink. The kingdom itself was taken away from him and given to the Medis and Persians. What I want to point out in this article, therefore, is that we should try our very best from now to cultivate self-control and avoid all temptations to drink which are sure to come when we grow old.

KAMRUDDIN FURNITURE MART,
No. 8, Town Hall Road, Madura.

We specialise in the manufacture of Chairs and other Office Furniture:—***Carved Table a speciality.***

Fair Terms ! **Durability Guaranteed !!**

ஸ்ரீ

"பாட்டியும் பேரனும்"

(சிறு கதை)

BY

S. Lakshimi IV F. D. S. H. S.

பாட்டிக்குப் படிப்பின் மீது உள்ள ஆசையோ சொல்லிமுடியாது. தான் படிக்கவேண்டும் என்பது அல்ல. தன் பேரப் பையன் படித்துக் கல்விமான் ஆகவேண்டும் என்பது அல்லும் பகலும் அவள் கொண்ட கவலை. இந்த ஆசைதான், தன் மகனும் மருமகளும் இறந்து அனேக வருஷங்கள் ஆகியும், பேரனைத்தானே வளர்த்து வரும்படி தூண்டிற்று. பாட்டி பணக்காரி.

இரவு எட்டு மணி அடித்தது. பேரன் இதற்குள் சாப்பிட்டுப் படுக்கை போட்டு விட்டான். பேரனைப் பார்க்கும் போது எல்லாம் பாட்டிக்கு வயிற்றை அள்ளிப் பிடுங்குகிறது. என் செய்வாள் பாவம்! பேரனுக்குப் படிப்புச் சங்கதியைத் தவிர எது பேசினு லும் பிடிக்கும். அவன் பாட்டியிடம் சதா சர்வதா கொழிப்பது எல்லாம் பாண்டியும் கிட்டியும் பற்றித்தான்.

மறுநாட் காலை. ஒரு குரல் மிகவும் இரக்கமாகவும் உருக்கமாகவும் கேட்கிறது. ஆனால், மற்றொன்றோ அப்படியில்லை; முடியாது; முடியாது; என்பதே அது கூறும் பதிலாய் இருக்கிறது. இது பாட்டியும் பேரனும் பேசும் பேச்சு. பேரன் 'முடியாது' என்று எதைச் சொல்லுவான்; படிப்பைத் தானே! எனினும் பாட்டிக்கு மனம் வெறுக்கவில்லை. 'சிறு பையன் தானே' கொஞ்சம் வயது வர வரத் திருந்தி விடுவான்' என்றது அவள் கொண்ட சமாதானம்.

சில காலம் சென்றது. 'ஊரார் எல்லாம் பேரனின் துஷ்டத் தனத்தைப் பற்றித் தன்னிடம் முறையிடுகின்றனர். இவருக்கு வயதும் பதினறுக்கு மேல் நடப்பு. இனி எவ்வகையிலும் இவனைப் பள்ளிக்கு அனுப்புவதே உசிதம் என்னும் எண்ணம் வலுத்தது. என்றும், 'அப்பா; ஐயா!' என்று கெஞ்சும் அவளது மனப்பான்மை, அன்றோடு மலையேறிவிட்டது. 'இனி நான் சொல்வதைக் கேளாது

வீண் வம்பு பண்ணிக்கொண்டு நீ இருப்பதை ஒருக்காலும் சகி யேன்; இன்றே கிளம்பி எங்கு வேண்டுமானாலும் செல்' என்று கடுமையாய்ப் பேசவும் செய்தாள்.

பேரன் கேட்டான். ஒருவாறு உடன் பட்டான். உடன் பட்டதற்குக் காரணம் படிப்பின் மீது உள்ள ஆசை யென்று நீங் கள் நினைத்து விடவேண்டாம்! பாட்டியைப் பிரிய மட்டும் அவ னுக்கு இஷ்டமில்லை. இவன் உடன்பட்டவுடனே, பாட்டிக்கு, தேவலோக வாழ்வு இங்கு வந்தது போல அவ்வளவு மகிழ்ச்சி உண் டாயிற்று. உடனே அவனைச் சாப்பிடச் செய்து, கையில் 40 ரூபாய்களையும், கொடுத்துப் படிக்க அனுப்பிவைத்தாள்.

பேரன் போகும் போதே நினைக்கிறான். நாம் 'பள்ளிக்கூடங் களிற் சேர்ந்து வருஷக்கணக்காய்ப் படிக்க முடியாது. கூடிய சீக் கிரம், முடித்துக் கொண்டு பாட்டியைத் திருப்தி செய்ததாக ஒரு பாவனை மட்டுமே செய்யவேண்டும்; இந்த எண்ணம் உள்ள வனுக்கு பள்ளிக்கூடம் பிடிக்குமா? படிப்புத்தான் வருமோ? இரண்டும் இல்லை.

வழி நீளப் போவது மட்டும் நிற்கவில்லை. ஒரு இடையன் ஆடு மேய்த்துக் கொண்டிருக்கிறான். அவனுக்கு வீட்டுக்கவலை ரொம்ப. செலவுக்குப் பணமில்லை. மிகவும் வாடிய முகத்துடன் காணப்பட்டான். நம்முடைய பையன் அங்கு வந்து சேர்ந்தான். இவனைக் குருவாய்க் கொள்ள அவன் மனம் ஒப்புக்கொண்டது. கண்டவுடன் படிப்பு முடிந்து விட்டதாகவே அவன் எண்ணம். 'நீ எனக்குப் பாடம் கற்பிக்கிறாயா? என்றான் பையன். இடை யனோ' 'நமக்குப் படிப்பு இல்லாமற் போனாலும், பணம் தருகி றேன் என்கிறான். வலியவந்த சீதேவியைக் காலால் உதைப்பது போல்' ஏன் வேண்டாம் என்று சொல்ல வேண்டும், என்று கருதி ஆகட்டும் என்றான்.

இடையனுக்கு இன்னது சொல்லித் தருவதென்பது ஒன்றும் புரியவில்லை. ஒரு எலி மண்ணைப் பறித்துக்கொண்டிருந்தது உடனே அதையே பாடமாக்கினான்.

"சுண்டெலி போல மண்ணைக் கையால் பறித்தலை நீ பார் அம்மானை
மன்னனுக்குப் பாட்டுகள் எல்லாம்வந்தது தானே அம்மானை"

என்று சொல்லிக் கொடுத்தான். பையனும் திருப்பிச் சொன்னான். பாடமாய் விட்டது. இதற்குப்பத்து ரூபாயும் பெற்றான் இடையன்.

இரண்டாம் நாள் பாடம் சொல்லிக்கொடுக்க வேண்டும். இடையன் தவித்துக்கொண்டு நிற்கிறான். ஆந்தை ஒன்று அவனுக்கு ஆறுதல் அளித்தது. பொந்தினுள்ளே நின்று ஆந்தை 'திரு திரு' என விழித்ததைப் பார்த்துப் பின்வரும் பாட்டைப் படிப்பித்தான்.

"பொந்துக் குள்ளே ஆந்தை போல விழிப்பதை நீ பார் அம்மானை
மன்னனுக்குப் பாட்டுகள் எல்லாம் வந்தது தானே அம்மானை"

இதற்கு பத்து ரூபாய் பையன் கொடுத்தான்.

இரண்டு மான்கள் நீர் பருக ஓடி வருவதைப் பார்த்த இடையன்,

"கலையும் மானும் போல எல்லாம் ஓடுவதைப் பார் அம்மானை
மன்னனுக்குப் படிப்புகள் எல்லாம் வந்தது தானே அம்மானை"

என்பதை மூன்றும் நாள் பாடமாகக் கற்றுக் கொடுத்தான். முப்பது ரூபாய் போயிற்றே என்பதின்றிப், பையனுக்குப் படிப்பு எல்லாம் வந்ததாக நினைத்ததனால் உண்டான மகிழ்ச்சியே அதிகம். இன்னும் ஒரு பாட்டுத்தான் சொல்லிக்கொடுக்க முடியும் என்று இடையன் கூறுகிறான்.

கடைசியாக, இடையன்,

"இரட்டைப் பனைமரம்போல நன்றாய் நிற்கிறதைப்பார் அம்மானை
மன்னனுக்குப் பாட்டுகள் எல்லாம் வந்தது காண் அம்மானை"

என்பதையும் கற்பித்து ரூபாய் நாற்பதையும் பெற்றான். படிப்பு முடிந்தது; திரும்பினான் ஊருக்கு.

பேரன் பெரும் பண்டிதனாய் விட்டதாகவே பாட்டியின் தீர்மானம். பையனுக்கு அன்று விருந்துச் சாப்பாடு. இரவு எல்லாப் படிப்பையும் படித்துக் காட்டுவதாய்ச் சொல்லிய பேரன் வார்த்தையைக் கேட்டதும் பாட்டி கொண்ட மகிழ்ச்சிக்கு ஓர் எல்லை சொல்ல வேணுமோ!

இரவு எங்கு பார்த்தாலும் மையிருட்டு! கிட்ட இருந்து கிள்ளி னாலும் கூடத் தெரியாது என்றே சொல்லலாம். ஊரெங்கும் ஒரே நிசப்தம். பையனும் பாட்டியும் தூங்குகிறார்கள். இவர்கள் வீட்டில் திருடர் முற்றுகை. கன்னமிட்டிருக்கின்றனர். உள்ளே புகும் சமயம். பையன் தான் படித்த பாடங்களை எதேச்சையாகச் சொன்னான். "சுண்டெலி போல பரிக்கினான்; பனைமரம் போல நிற்கிறான்; ஆந்தை போல முழிக்கிறான்; கலைமான் போல ஓடுகிறான்; என்றெல் லாம் பாடக் கேட்ட திருடர்கள், தம் வரவை வீட்டார் அறிந்து கொண்டார்கள் என்று மயங்கி, வேறு வீட்டில் திருடிய பொருள் களையும் போட்டு விட்டு ஓட்டம் எடுத்தார்கள்.

மறு நாள் காலையில், பேரன் படிப்பினால் நேர்ந்த லாபத்தைப் பாட்டி பார்த்தாள். அளவு கடந்த உவகை அடைந்தாள். பேர னும் பாட்டி இறந்தபோது அவளது மிக்க செல்வத்தைப் பெற்று செல்வவானாக விளங்கினான்; இவன் கற்ற கல்விக்கே பயன் இதுவா குமானால், 'நன்றாக ஒருவன் கல்வியைக் கற்றால், அது நமக்கு என்றும் பொன்றாத் துணையாய் இருந்து எழுமையும் விழுப்பம் பயக்கும்" என்று வள்ளுவர் கூறிய மொழி பொய்யா மொழியே அன்றோ!

"அடங்காமை"

BY

D. Sivabakkiam, IV D.

அடங்காமை என்பது பெரியோர்கள் நீதி நூல்களில் கூறியுள்ள நீதிகளின்படி நடவாதிருத்தலே அடங்காமை எனப்படும். மக்க ளாய்ப் பிறந்தார் அனைவரும் ஐம்பொறிகளையும் தக்கவாறு அடக்கி நடத்தலே தகுதியுடையதாகும். அஃதன்றி, பொறிகளை மனம் போல் செல்ல விடுவேமாயின் நாளுக்கு நாள் அது கனத்துத்தடித்து அடங்காமை என்னும் பெயர் கொண்டு பழிக்காளாவதோடு தக்க தண்டனை யுறுமென்பது நிச்சயம். இதற்குச் சான்றாக ஓர் கதைக் கூறுதும்.

ஒரு ஊரில் குடியானவன் ஒருவனிருந்தான். அவனுக்கு ஒரு பெண் குழந்தை இருந்தது. அக்குழந்தையை அவன் செல்ல

மாக வளர்த்து வந்தான். அதனால் அவன் அக்குழந்தை எவ்வளவு துஷ்டத்தனம் செய்தாலும் கண்டிப்பதே யில்லை.

இதனால் அக்குழந்தை பெரியவளாகியும் அடக்குவாரின்றி இழி குணம் படைத்து இரு முதுகுரவர்களுக்கும் கீழ்ப்படியாமல் ஊரார்களிடம் வாயாடியும் சண்டை செய்தும் வருவாளாயினள்.

இஃதிவ்வாறாக அவள் மணப்பருவம் அடைந்து அதிக நாளாகியும் அவளை மணக்க மணமகன் ஒருவரும் முன்வரவில்லை. ஏனென்றால் அவள் அடங்காமை என்ற இழி குணத்தினால் கட்டுப்பட்டு எவரையும் மரியாதை செய்யாததுதான் காரணம்.

இப்படியிருக்கும்பொழுது ஒரு நாள் திடமனதுடைய மணமகனொருவன் தான் எப்படியாவது அவ்வடங்காப் பேயை வதுவை செய்துகொண்டு அவளை அடக்க வேண்டுமென்றெண்ணி அவளைக் கல்யாணம் செய்து கெண்டான். மறு நாள் மணமகன் மணமகளை அழைத்துக் கொண்டு தன் இல்லத்திற்கேகினான்.

போகும் வழியில் மாமரம் ஒன்று இருந்தது. மணமகன் அதை மணமகளுக்குக் காண்பித்து இது என்னவென்று வினவினான். அதற்கு அவள் தன்னுடைய அடங்காத் தனத்தினால் இது எனக்கு என்ன தெரியும். செல்லப்பிள்ளைக்கு என்று இழுப்பு வந்தவள் போலக் கழுத்தையும் தேகத்தையும் ஒருங்கே வளைத்துக் கொண்டுச் சொன்னாள்.

எதையும் காதில்விழாதவன்போல் பாவித்து, கொஞ்சம் தூரம் சென்று ஒரு வன்னி மரத்தைக் காண்பித்து இது என்ன என்று தெரியாதவன் போலக்கேட்டான். அதற்கும் அவள் முன் சொன்ன பதிலையே செப்பினாள். அதற்கும் மணமகன் செவி கொடாது சிறிது தூரஞ் சென்றான். வழியில் ஒரு தென்னை மரத்தைக் கண்ணுற்று இது என்ன என்று கேட்டான். அதற்கும் அசட்டைப் பதிலே அவனுடைய செவியில் விழுந்தது.

இதையெல்லாம் மனதில் வைத்துக்மொண்டு ஒரு வயலோரமாகச் சென்றான். அங்கே ஒருவன் ஏரும் கலப்பையும் வைத்துக் கொண்டிருந்தான். மணமகன் அந்த ஏர் கலப்பையைக் காண்பித்து இது என்ன என்று கேட்டான் அதற்கும் முன் சொன்ன பதிலையே

அவள் சொன்னாள். "சரி இவளது முரட்டுத்தனத்தை எப்படியும் அடக்கி விடுகிறேன்". என்று மனதில் சொல்லிக்கொண்டே ஒரு குளத்தின் மருங்கில் சென்றான். அங்கே நத்தைகள் சென்று கொண்டிருந்தன இன்னும் அவளைச் சோதிக்கிறதற்காக அந்த நத்தையைக் காண்பித்து இது என்ன என்று கேட்டான். அதற்கும் முன் சொன்ன பதிலையே புகன்றாள்.

அப்படி அவர்கள் போய்க்கொண்டிருக்கும் பொழுது அங்கே ஒருவன் சணல் நாறு கொண்டு வருவதைக் கண்டான். கண்டதும் அவன் தன் மனைவியை நோக்கி இது என்ன என்று கேட்டான். அதற்கும் அடங்காமையே பிரதானமாகக் கொண்டிருந்த அவள் அதே பதிலையே உரைத்தாள். சரி இவளுடைய அடங்காமையே ஒழிக்க இது தான் தருண மென்றெண்ணி அந்த நாரை விலை பேசி வாங்கிக் கொண்டான்.

வாங்கியானதும் அதை முறுக்கிக் கயராக திரித்தான். பின்பு அவளை நோக்கிச் சரி' நீ முன்பு கண்ட தெல்லாம் ஒன்று விடாமல் சொல்லு என்றான். அப்பொழுது பதில் சொல்ல மறுத்தாள். உடனே அவன் சணப்பங் கயிரை எடுத்து தோலுரிய அவளை அடித்தான். உடனே சொல்லுகிறேன் என்று ஒரு குதி குதித்து விம்மி விம்மி அழுது கொண்டே

மா மரமடி வன்னிமரம்
வானுலாவிய தென்னை மரம்
ஏர்க்கலப்பை குளத்து நத்தை
என்னை யடிக்குமாம் சணப்ப நாறு.

